**தலைப்பு 186 – தொழில்நுட்ப அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தொழில்நுட்ப அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 05 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில்நுட்ப அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொழில்நுட்ப அமைச்சால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான தேவைப்பாடு காணப்படாததன் காரணமாக பரிந்துரைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதியல்லா சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 150,000,000 ஆக காணப்பட்ட போதிலும் திறைசேரி புத்தகங்களின் (கணக்கு கூற்று இல. 10) இன் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 40,000,000 ஆக காணப்பட்டது. அதாவது ரூபா 110,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடுகள் சரியானது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2022.01.31 இல் முதலாவது திறைசேரி கணனி அச்சீட்டுத்தாளைப் பெற்ற பின்னர் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, இரண்டாவது திறைசேரி கணனி அச்சீட்டுத்தாள் சரிபார்ப்பில் உள்ளதால் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இது போன்ற தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சின் புத்தகங்களிலும் திறைசேரி புத்தகங்களிலும் உள்ள மீதிகள் ஒன்றோடொன்று ஒப்பிடப்படும் வகையில் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மூலதன மானியங்கள் தொடர்பான நி.பி. மாற்றங்கள் அமைச்சு புத்தகங்களின் பிரகாரம் ரூபா 510,000,000 ஆக காட்டப்பட்ட போதிலும் திறைசேரி | -மேற்படி- | -மேற்படி- |

புத்தகங்களின் (கூற்று இல. 12) பிரகாரம் இந்த தொகை ரூபா 400,000,000 ஆக இருந்தது. இதன் விளைவாக, இந்த ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மூலதன மானியம் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 4,370,480,000 ஆக காணப்பட்டதுடன் திறைசேரி புத்தகங்களின் (கணக்கு கூற்று இல. 10) பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 4,480,480,000 ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நி.பி. 85 இன் பிரகாரம் அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப அமைச்சு 2020/11/20 ஆம் திகதிய 2202/25 ஆம் இலக்க துணை வர்த்தமானியின் பிரகாரம் 2020/11/08 முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில்நுட்ப அமைச்சு என்ற பெயரில் ஒரு புதிய அமைச்சு நிறுவப்பட்டது. இதற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை அமைச்சு தயாரித்திருக்காததுடன் திறைசேரி வழங்கிய மதிப்பீடுகளை அமைச்சு பயன்படுத்தியிருந்தது. | அதன் பிரகாரம் பூர்வாங்க மதிப்பீடுகள் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகளை இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பது தலைமை எண்ணும் உத்தியோகத்தரின் (Chief Counting Officer) பொறுப்பாக காணப்படுகின்ற போதிலும் அவ்வாறு செய்யத் தவறியதால், 10 செலவின தலைப்புக்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 60 மில்லியன் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | தாங்கள் குறிப்பிட்டது போல், அமைச்சு அலுவலகம் மற்றும் அமைச்சுக்கு பல மாதங்கள் ஆகியும் பதவியணியினர் ஆட்சேர்ப்பு இடம்பெறாததாலும், அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டின் நடுப்பகுதி வரை அமுலப்படுத்தப்படாமல் இருந்ததாலும், தாங்கள் குறிப்பிட்டுள்ளவாறு நிதியேற்பாடுகளில் சேமிப்பொன்று ஏற்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட்டு தேவையான தொகைக்கு மாத்திரமே நிதியேற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 195,915,000 கூட்டுமொத்த தொகையில் ரூபா 180,209,037 தொகையான ஒதுக்கீடு 5 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | -மேற்படி- | -மேற்படி- |

**2.2 முற்பணக் கணக்கு எல்லைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 506 (ஈ) இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு அமைச்சு புத்தகங்களின் பிரகாரம் ஆகக்கூடிய செலவின எல்லை, ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை மற்றும் ஆகக்கூடிய வரவு மீதி எல்லை முறையே ரூபா 60,000,000, ரூபா 140,000 மற்றும் ரூபா 2,500,000 ஆக திருத்தப்பட்டிருந்த போதிலும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அவற்றின் பெறுமதி முறையே ரூபா 60,000,000, ரூபா 25,000,000 மற்றும் ரூபா 100,000,000 என காட்டப்பட்டது. | 2021.12.30 ஆம் திகதிய எம்ஓரீ/எவ்ஜஎன்/பியூபீ.ஏடிவீ ஆம் இலக்க கடிதம் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் எல்லைகளை திருத்துமாறு அமைச்சு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கைகளை விடுத்தது. கோரிக்கையின் பிரகாரம் எல்லைகள் திருத்தப்பட்ட போதிலும் ஆவணங்கள் தவறவிடப்பட்டதால் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய செயன்முறை தவறிவிடப்பட்டது. ஆனால் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது தேவைப்பட்ட திருத்தப்பட்ட எல்லைகள் பற்றிய எழுத்துமூலமான அறிவித்தல் அந்த நேரத்தில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன | அமைச்சு புத்தகங்களின் பிரகாரமும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமும் முற்பண பீ கணக்கு எல்லைகள் ஒப்பீடு செய்யப்பட்டு பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். |

.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 7512 சதுர அடியில் 2300 சதுர அடி (அறை இலக்கம் 1105 இற்கு சொந்தமானது) ஏறத்தாழ 06 மாதங்களாக வாடகைக்கு விடப்பட்டுள்ள நிலையில் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 11 அளவில் அலுவலக வேலையை மேற்கொள்ளக்கூடிய வகையில் எவ்வித மேம்படுத்தலும் (பிரிவினை) இன்றி குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | ICTA நிறுவகத்தின் ஒரு அறையில் சரியான வசதிகள் இன்றியும் இடமின்றியும் அமைச்சு அதனது கடமைகளை மேற்கொண்டு வந்தது. 2021.06.30 அளவில் ICTA வேறொரு கட்டிடத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. எனவே அந்தத் திகதிக்கு முன்னதாக அமைச்சு வன் கோல் பேசிற்கு (One Galle Face) மாற்றப்பட வேண்டியிருந்தது. இதனால் அலுவலக வளாகத்தை பிரித்து மேம்படுத்துவதற்கான கால அவகாசம் காணப்படவில்லை. விலைகளில் எற்பட்ட துரித அதிகரிப்பால் வழங்குநர்கள் விலைகளை அதிகரிக்க தீர்மானித்தனர். இதன் காரணமாக பிரிவினை மற்றும் மேம்பாடுகளை முறையாக செய்ய முடியவில்லை. | நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு அமைச்சுக்களுக்கான கட்டிடங்கள் சாத்தியமானளவு குறைந்த கிரயத்தில் தெரிவு செய்யப்பட்டு உரிய வளங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சை நடாத்துவதற்கான அலுவலக வளாகத்தை தெரிவு செய்யும் போது, ஷங்ரி-லா ஹோட்டல்ஸ் லங்கா பிறைவேட் லிமிட்டட்டிற்கு ரூபா 1,878,000 மாதாந்த நில வாடகையை செலுத்தி அமைச்சு வன் கோல் பேசில் அலுவலகத்தை பேணி வருவது அவதானிக்கப்பட்டது. | 2021 செப்தெம்பர் 22 இல் வன் கோல் பேஸ் நிறுவனத்துடன் தொழில்நுட்ப அமைச்சு செய்துகொண்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் ஷங்ரி-லா ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 11வது மாடியில் 7512 சதுர அடி பரப்பளவிற்கு ரூபா 1,878,000 செலுத்தப்பட்டுள்ளது. கௌரவ ஜனாதிபதியின் கீழான அமைச்சு என்ற | பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வகையில், 2020.11.18 முதல் அமுலுக்கு வரும் வகையில் 2020.11.20 ஆம் திகதிய விசேட வர்த்தமானி மூலம் தொழில்நுட்ப அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியின் வாய்மொழிமூல அறிவுறுத்தல்களின் அடிப்படையில் சனாதிபதி அலுவலகத்தில் இருந்து சில நிமிடங்களில் அடையக்கூடியவாறு இது மிகவும் அருகில் உள்ளதுடன் கௌரவ ஜனாதிபதி அவர்கள் அமைச்சுக்கு வழமையாக விஜயம் செய்வதால் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அமைச்சுக்கான இடத்தை தெரிவு செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை, இலங்கை கணனி அவசரநிலைப் பதிலளிப்புக் குழு, இலங்கை உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கைத்தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு ஆகிய நிறுவனங்களுக்கு மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களாக முறையே ரூபா 875,354,212 மற்றும் ரூபா 986,617,824 தொகைகள் செலவிடப்பட்டுள்ளன. ஆனால் அந்த நிறுவனங்களின் வகிபங்கு மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தும் செயற்பாடு 2021 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 29 வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்கு தேவையான ஊழியர்கள் நியமிக்கப்படாமையால் அமைச்சின் விவகாரங்களை முறையாக ஒழுங்கமைக்க முடியவில்லை. ஆனால் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி, அந்த நிறுவனங்களின் தலைவர்களின் ஆதரவுடன், தேவையான அனைத்து பணிகளும் சிறப்பாக செய்யப்பட்டு சிறப்பாக முகாமை செய்யப்பட்டன. தேவையான இடங்களில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும் வசதிகள் மற்றும் வளங்கள் இல்லாத குறைபாடுகள் காணப்பட்டன. ஆனால் தற்போது இதற்காக பிரதம உள்ளக கணக்காய்வாளருடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதுடன் எதிர்காலத்தில் திட்டமிட்டவாறு மதிப்பீடு செய்வதற்கு தேவையான | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயவாற்றலை மதிப்பிடுவதற்கு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் என்னால் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | நானோரெக்நோலஜி (தனியார்) கம்பனியின் ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை தேசிய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்கும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கு பரந்த சந்தையை வழங்குவதற்கும் அமைச்சு மட்டத்திலான அரசாங்க தலையீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 நவம்பர் 20 ஆம் திகதிய 2202/25 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 2020 நவம்பர் 18 முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில்நுட்ப அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது. உத்தியோகத்தர் பற்றாக்குறை, இரண்டு வருடங்களாக காணப்பட்ட கொரோனா தொற்று மற்றும் முதலீட்டாளர்கள் பற்றாக்குறை, நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் என்பன இந்த நிலைமைக்கு வழிவகுத்ததுடன், புதிய தொழில்நுட்பத்துடன் நிறுவனத்தை முன்னோக்கி கொண்டு வருவதற்கும் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அமைச்சின் ஆதரவை நாங்கள் ஏற்கனவே வழங்கி வருகிறோம் என்பதை நான் குறிப்பிடுகிறேன். | சந்தையை விரிவுபடுத்துவதற்கும், ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை சமூகமயமாக்குவதற்கும் அமைச்சு மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், சிரேஷ்ட நிலை பதவிகளில் 04 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை பதவிகளில் 01 வெற்றிடமும், இரண்டாம் நிலை பதவிகளில் 15 வெற்றிடங்களும், ஆரம்ப நிலை பதவிகளில் 14 வெற்றிடங்களும் காணப்பட்டன. | அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்ட 13 பதவிநிலை பதவிகளுக்கு 09 உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான சாத்தியம் காணப்பட்டது. இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களை வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட | நிறுவனத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான பதவியணியினரை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

போதிலும் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் வரை உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு உத்தியோகத்தர்களை வழங்க முடியாது என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும், ஒரு வருடத்திற்குள், இரண்டாம் நிலை பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட 30 பதவிநிலைகளுக்கு 15 உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டதுடன் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தற்போது 17 ஆக உயர்ந்துள்ளது. ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டாம் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வகை உத்தியோகத்தர்கள் பல்நோக்கு படை மூலம் (multi-purpose force) வழங்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அத்தகைய உத்தியோகத்தர்கள் முறையாக வழங்கப்படவில்லை. எனினும், ஆரம்ப நிலையில் சாரதி பதவிகளுக்கு இரண்டு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான சாத்தியம் காணப்பட்டது.

வேண்டும்.